பார்லிமெண்ட் தேர்தலில் 145 இடங்களில் வெற்றி

இலங்கையில் மீண்டும் பிரதமராகிறார் ராஜபட்சே

டெலிபோனில் அழைத்து மோடி வாழ்த்து

கொழும்பு, ஆக.7–

இலங்கையில் நடந்த 16வது நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தா ராஜபக்சே கட்சி மூன்றில் இரு பங்கு இடங்களை கைப்பற்றி அபார வெற்றி பெற்றுள்ளது.

குறிப்பாக சிங்கள மக்கள் அதிகமாக வாழும் தெற்கு மாவட்டங்களில் 60 சதவீதத்துக்கும் மேலான வாக்குகள் வித்தியாசத்தில் பெரும்பாலான இடங்களில் ராஜபக்சே கட்சி பெற்று வெற்றி பெற்றுள்ளது. இதனால், மகிந்தா ராஜபக்சே மீண்டும் பிரதமர் ஆகிறார்.

இலங்கையில் கடந்த 2005ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரை அதிபராக இருந்தவர் மகிந்தா ராஜபக்சே. ஆனால், அவரது சொந்த கட்சியில் எழுந்த எதிர்ப்பு மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றால் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டார்.

இதன்பின்னர் கடந்த நவம்பரில் நடந்த அதிபர் தேர்தலில், அவரது சகோதரர் கோத்தபய ராஜபக்சே வெற்றி பெற்றார். பின்பு தனது சகோதரரான மகிந்தாவை பிரதமராக்கினார். ஆனால், அரசியலமைப்பு மாற்றங்களை மேற்கொள்ள பெரும்பான்மை பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் இலங்கையில் நாடாளுமன்ற தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டது.

எனினும், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவலால் இரு முறை ஒத்தி வைக்கப்பட்ட நாடாளுமன்ற தேர்தல், கடைசியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

225 இடங்களை கொண்ட நாடாளுமன்றத்தில் 196 இடங்களுக்கு ஓட்டுப்பதிவு நடைபெற்றது. மீதி 29 இடங்கள், கட்சிகள் பெறுகிற வாக்குகளின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டு அறிவிக்கப்படும். மொத்தம் 1.6 கோடி வாக்காளர்களில் 75 சதவீதத்தினர் வாக்களித்தனர். தேர்தல் முடிவுகள் நேற்று முதல் வெளிவர தொடங்கின. இதில், நேற்றிரவு வரை ராஜபக்சேவின் எஸ்.எல்.பி.பி. (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனா) கட்சி முன்னிலையில் இருந்தது.

இந்த நிலையில், ராஜபக்சேவின் கட்சி 145 இடங்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது. இதனால் அக்கட்சி, 3ல் 2 பங்கு இடங்களில் வெற்றியடைந்து சூப்பர் மெஜாரிட்டியை பெற்றுள்ளது. சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தி 54 இடங்களிலும், சம்பந்தனின் தமிழரசு கட்சி 10 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. ரணில் விக்ரமசிங்கேயின் ஐக்கிய தேசிய கட்சி ஒரு இடத்தில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது. இதேபோன்று நுவரெலியாவில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் வெற்றி பெற்றுள்ளார்.

இந்தியா – இலங்கை உறவு புதிய உச்சந் தொடும்....

தேர்தலில் மகிந்தா ராஜபக்சே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டவுடன் உலகளவில் முதல் தலைவராக பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்தார். அவரின் வாழ்த்துச் செய்தியில்" இலங்கையும், இந்தியாவும் இரு தரப்பு ஒத்துழைப்புடன் கூட்டாக அனைத்து துறைகளிலும் செயல்படுவோம். நம்முடைய சிறப்பான இந்த உறவு புதிய உச்சத்துக்கு செல்லும்" எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து மகிந்தா ராஜபக்சே ட்விட்டரில் பதிவிட்ட செய்தியில் " தொலைப்பேசி மூலம் அழைத்துப் பேசியதற்கு பிரதமர் மோடிக்கு நன்றி. இலங்கை மக்களின் ஏகோபித்த ஆதரவுடன், உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்திருக்கிறேன், நம்முடைய இருநாடுகளின் நீண்ட நாடுகளின் நீண்டகால நட்பு மேலும் வளரவேண்டும். இந்தியாவும், இலங்கையும் நண்பர்கள், உறவுகள்" எனத் தெரிவித்துள்ளார்.

விக்ரமசிங்கே கட்சிக்கு அடி

இந்த தேர்தலில் மிகப்பெரிய அடியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கேயின் ஐக்கிய தேசிய கட்சிக்கு(யுஎன்பி) இருந்தது. யுஎன்பி கட்சி ஒரு இடத்தில் மட்டுமே வென்றது. 22 தேர்தல் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்தில் கூட மிகப்பெரிய கட்சியான யுஎன்பி கட்சியால் வெல்ல முடியவில்லை.

யுஎன்பி கட்சியிலிருந்து விலகி தனியாக எஸ்ஜேபி எனும் கட்சித் தொடங்கிய சஜித் பிரமேதாசா, முஸ்லிம் கட்சியின் ஆதரவுடன் 55 இடங்களில் வென்றுள்ளார். குறிப்பாக திரிகோணமலை மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களை பிரேமதசா கட்சி கைப்பற்றியுள்ளது. சஜித் பிரேமதாசாவின் எஸ்ஜெபி கட்சி 2.70லட்சம் வாக்குகளைப் பெற்று, அதாவது 23 சதவீதம் வாக்குகளைப் பெற்று 2வது பெரிய கட்சி எனும் அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்புக்கு பின்னடைவு

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் முக்கியக் கட்சியாக திகழும் தமிழ்தேசிய கூட்டமைப்பு இந்த முறை மோசமான தோல்வியைப் பெற்றது. கடந்த முறை 16 இடங்களில் வென்ற தமிழ்தேசியக் கூட்டமைப்பு இந்த முறை 10 இடங்களில் மட்டுமே வென்றது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கிய மும்பை மாநகராட்சி

மும்பை, ஆக. 7–

இந்தியாவில் கொரோனா பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இவற்றில் மகாராஷ்டிரம் முதல் இடத்தில் உள்ளது. மும்பை நகரம் அதிக பாதிப்புகளை சந்தித்து உள்ளது. இதனை முன்னிட்டு மும்பை மாநகராட்சி தடுப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கி உள்ளன.

கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக நாட்டின் பிற பகுதிகளில் இருந்து விமானத்தில் பயணித்து மும்பை வந்து இறங்கும் விமான பயணிகள் அனைவரும் தங்களை 14 நாட்கள் வரை வீட்டில் தனிமைப்படுத்தி கொள்வது கட்டாயம் என அறிவித்து உள்ளது.

இதில் இருந்து விலக்கு பெற விரும்பும் அரசு அதிகாரிகள், மும்பை மாநகராட்சியின் வேலை நாட்களில், மும்பைக்கு சென்று சேர்வதற்கு 2 நாட்களுக்கு முன்பே அதுபற்றி தெரிவித்திருக்க வேண்டும் என்று தெரிவித்து உள்ளது.

ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் பதவியை ராஜினாமா செய்தவர்

மத்திய அரசின் தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரியாக கிரிஷ் சந்திர முர்மு நியமனம்

புதுடெல்லி, ஆக.7–

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநர் பதவியிலிருந்து ராஜினாமா செய்த கிரிஷ் சந்திர முர்மு, மத்திய அரசின் தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி பதவி என்பது அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு, மாநில அரசுகளின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்யும் பொறுப்பு உள்ள பதவியாகும். தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் அனைத்தும்மாநிலசட்டப்பேரவை, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

இந்நிலையில் தற்போது தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியாக இருக்கும் ராஜீவ் மெஹ்ரிஷியின் பதவிக்காலம் இன்று முடிவதையடுத்து, அந்தப் பதவிக்கு கிரிஷ் சந்திர முர்மு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து பொருளதார விவகாரத்துறை நேற்று இரவு வெளியிட்ட அறிவிப்பில், 'தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரியாக கிரிஷ் சந்திர முர்முவை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார். அவர் அந்த பதவி ஏற்கும் நாளிலிருந்து இந்த உத்தரவு அமலுக்கு வரும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோடி முதல்வராக இருந்த காலத்திலேயே நெருக்கம்

குஜராத் முதல்வராக மோடி இருந்த போது மாநில உள்துறையில் பணியாற்றியவர். இதேபோல மோடியின் முதன்மை செயலாளராக பணியாற்றியவர்.

1959–ம் ஆண்டு நவம்பர் 21–ல் பிறந்தவர். ஒடிசா, மாயூர்பஞ்ச் மாவட்டத்தில் பெட்ரோபடி கிராமத்தில் பிறந்தவர். உத்தவ் பல்கலைக்கழகத்திலிருந்து அரசியல் விஞ்ஞானத்தில் (பொலிடிக்கல் சயின்ஸ்) பட்ட மேற்படிப்பு பட்டம் பெற்றவர்.

பர்மிங்காம் பல்கலைக்க ழகத்திலிருந்து எம்.பி.ஏ. பட்டமும் பெற்றவர். உடன் பிறந்தவர்கள் 6 சகோதரர்கள், 2 சகோதரிகள். இவர் தான் மூத்தவர்.

ஜம்மு – காஷ்மீரில் முதல் துணை ஆளுனராக இருந்தவர். மத்திய அரசின் 14வது தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி.

மறைமுக வரிகளில் சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று அறிவுறுத்திய நேரத்தில் நிதித்துறையில் சரக்கு மற்றும் சேவை வரி பிரிவில் நிர்வகிக்கும் பொறுப்பில் கூடுதல் செயலாளராக இருந்தவர்.

மனோஜ் சின்ஹா

முன்னதாக ஜம்மு காஷ்மீர் மாநிலம் யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டபின், முதல் துணை நிலை ஆளுநராக முர்மு நியமிக்கப்பட்டார். துணை நிலை ஆளுநராக பதவி ஏற்று ஓர் ஆண்டு நிறைவடைவதற்குள் , நேற்று முர்மு தனது பதவியை ராஜினாமா செய்தார்.

அந்த ராஜினாமாவை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஏற்றுக்கொண்டார். இதனை தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநராக பாஜக மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மனோஜ் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1985ம் ஆண்டு குஜராத் கேடர் ஐஏஎஸ் அதிகாரியான ஜி.சி. முர்மு பிரதமர் மோடி குஜராத் முதல்வராக இருந்தபோதும், அமித் ஷா அமைச்சராக இருந்தபோதும்

அவர்களுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றியவர்.

மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தபின் மத்திய பணிக்கு அழைக்கப்பட்ட முர்மு, மத்திய அரசின் செலவினத்துறையின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அதன்பின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் பிரிக்கப்பட்டபின் அங்கு முதல் துணைநிலை ஆளுநராக நியமிக்கப்பட்டார்

இன்டெக் கேபிடல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 708, மஞ்சுஷா பில்டிங், 57, நேரு பிளேஸ், புது டெல்லி 110 019.

இணைப்பு IV [விதி 8 (1)] சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள இன்டெக் கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆஃப் 2020) மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதி முறைக்கு ஏற்ப கடன்தாரர் M/S. ராஜேஸ்வரி இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட் (கடன்தாரர்), திரு. G. ராமமூர்த்தி (உடன் கடன்தாரர்), திருமதி. உஷா R (உத்தரவாததாரர்), (கடன் ஒப்பந்த எண். LNCHE01413–140002713 மற்றும் கடன் ஒப்பந்த எண். LNCHE00713–140002860) ஆகியோருக்கு அனுப்பிய 11 ஏப்ரல் 2018ம் தேதியிட்ட டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகை ரூ.8,00,16,645/–ஐ (ரூபாய் ஆறு கோடியே பதினாறாயிரத்து அறுநூற்றுநாற்பத்தைந்து மட்டும்) மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்து மாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்/அடமானதாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்/அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13 துணை பிரிவு (4)ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், 2002 கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், 3 ஆகஸ்ட் 2020 தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்/அடமானதாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து இன்டெக் கேபிடல் லிமிடெட்டுக்கு 05 ஏப்ரல் 2018 அன்று வரை செலுத்த வேண்டிய தொகை ரூ.6,00,16,645/ (ரூபாய் ஆறு கோடியே பதினாறாயிரத்து அறுநூற்றுநாற்பத்தைந்து மட்டும்) மற்றும் முழுமையாக செலுத்தும் நாள் வரையிலான வட்டி மற்றும் செலவுகளுக்கும் பிணையாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டப் பிரிவு 13–ன் துணை பிரிவு (8)–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

அசையா சொத்தின் விவரம்

சென்னை 600 118, கொடுங்கையூர், பேஸ் II, 7வது தெரு, முத்தமிழ் நகர், புதிய எண். 9, பழைய எண். 3/524 (''ஈடுபெற்ற சொத்து'') மற்றும் சென்னை 600 094, சூளைமேடு, வன்னியர் தெரு, கதவு எண். 10, எண். 156ல் (''ஈடுபெற்ற சொத்து'') அமைந்துள்ள குடியிருப்பு/வணிக சொத்து நிலம்/கட்டிடம்/கட்டமைப்புகள் மற்றும் பொருத்தி கள்.

கொடுங்கையூர் சொத்தின் எல்லைகள் மற்றும் வன்னியர் தெரு சொத்தின் எல்லைகள்.

வடக்கில் மனை எண். 3/523, வடக்கில் மனையின்படி,
தெற்கில் மனை எண். 3/525 தெற்கில் மனையின்படி
கிழக்கில் 16 அடி ரோடு கிழக்கில் மனையின்படி
மேற்கில் மனை எண். 3/600 மற்றும் 3/601 மேற்கில் மனையின்படி

தேதி: 7.08.2020 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: நேரு பிளேஸ், புதுடெல்லி **இன்டெக் கேபிடல் லிமிடெட்**

பெயர் மாற்றம்

எனது மகள் , **A.RASHME**
த/பெ. S.அந்தோணி ராஜேந்திரன்,
பிறந்த தேதி: 30.10.2001
வசிப்பிடம்: எண்.3எ, வடக்கு தெரு,
இருதயகுளம்,விக்ரம சிங்கபுரம்
போஸ்ட்,திருநெல்வேலி மாவட்டம்,
தமிழ்நாடு-627425
இனி முதற்கொண்டு
RASHMI.A
என்று அழைப்படுவார்.

தந்தை
S.அந்தோனி ராஜேந்திரன்

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் திருமதி. கி.ராஜ்குமார், த/பெ. திரு. கிருஷ்ணசுவாமி வயது 63, எண்.308/6, குட்வில் காலனி, பெல்லி ஏரியா, அண்ணா நகர், சென்னை – 40. என்பவர் சார்பில் தெரிவிப்பது யாதெனில்.

மோரை கிராமம் பத்திர எண்: 2059/1986, சர்வே எண் 521/3–ல் அடங்கிய 2400 சதுரடி. ஆவடி சார்பதிவாளர் மனைகள் எனது கட்சிக்காரர் பெயரில் உள்ள ஆவணத்தை ஆவடி நகராட்சியில் கட்டிட ஒப்புதல் பெறுவதற்கு பதிவு செய்ய செல்லும்போது 15.07.2020 அன்று மேற்கூறிய பத்திரங்கள் காணாமல் போனது தெரியவந்தது. ஆகவே இப்பத்திரத்தை யாராவது எடுத்திருந்தாலோ அதனை எனது கட்சிக்காரரிடம் இந்த அறிவிப்பு கண்ட 10 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும் என்றும் அவ்வாறு கொடுக்காத பட்சத்தில் அதனை தவறான வழியில் பயன்படுத்தினால் அவை எமது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்று இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

P. JAYAPARTHIBAN, M.A., L.L.B.,
ADVOCATE
Plot No. 14B, Sabari Homes, Devi Nagar,
Thirumullaivoyal, Chennai - 109.
90030 33848

KUMBHAT FINANCIAL SERVICES LIMITED
CIN : L65991TN1993PLC024433
Kumbhat Complex, No: 29 5th Floor,
Rattan Bazaar, George Town,
Chennai – 600 003.

NOTICE

Notice is hereby given pursuant to Regulation 29 read with Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 that a Meeting of Board of Directors of the Company will be held on Friday 14th day of August 2020, at 3.00 P.M at Registered Office Kumbhat Complex No: 29 Fifth Floor Rattan Bazaar, Park Town, Chennai – 600 003 to consider inter alia unaudited financial results for the quarter ended 30th June, 2020.

The Said information is also available on the Company's website at www.kumbhatfinancialserviceslimited.com and also on the website of stock exchange, i.e., BSE-www.bseindia.com.

For KUMBHAT FINANCIAL SERVICES LTD.
SANJAY KUMBHAT
(Managing Director)
(D.N.No: 03077193)
Place : Chennai
Date : 05.08.2020

PUBLIC NOTICE

This is to inform that my client R. SELVI, wife of Raji, residing at Door No. 1576, Bajanai Koil Street, Madanandapuram, Chennai — 600 125, is the Power Holder of Mr. T. Vijayakumar in respect of the property at Plot No. 90 to an extent of 700 sq.ft. comprised in Survey No. 208, situated at Vasanthapuram Phase II, Seenivasapuram Village, Sriperumbudur Taluk, Kancheepuram District, within the Sub Registration District of Sriperumbudur and Registration District of Kancheepuram. My client had lost the original Sale Deed of the above said property viz. Sale Deed dated 09.03.2007, registered as Document No. 3263/2007. She had lost the document at Chowdry Road, Kesavardhini, Valasaravakkam, Chennai.

I therefore hereby call upon the General Public to hand over the said Sale Deed if in possession to the undersigned or my client within 15 days from the date of this notice.

M. ENGLES
Advocate
Law Association of Saidapet,
M.M.Court Campus, Saidapet,
Chennai-600 015
Cell No. 9940444191

FOR THE ATTENTION OF THE PUBLIC SHAREHOLDERS OF

WABCO INDIA LIMITED

Registered Office: Plot No. 3 (SP), III Main Road, Ambattur Industrial Estate, Chennai, Tamil Nadu – 600058, India;
Tel: +91 44 3090 2600/ 4224 2000; **Fax:** +91 44 3090 2609/4224 2009; **Website:** www.wabcoindia.com

OPEN OFFER FOR THE ACQUISITION OF UPTO 4,741,900 (FOUR MILLION SEVEN HUNDRED FORTY-ONE THOUSAND NINE HUNDRED ONLY) FULLY PAID-UP EQUITY SHARES OF FACE VALUE OF ₹ 5 (RUPEES FIVE ONLY) EACH OF WABCO INDIA LIMITED ("TARGET COMPANY"), REPRESENTING 25%* (TWENTY-FIVE PER CENT.) OF THE TOTAL FULLY PAID-UP FULLY DILUTED VOTING EQUITY SHARE CAPITAL OF THE TARGET COMPANY AS OF THE 10TH (TENTH) WORKING DAY FROM THE CLOSURE OF THE TENDERING PERIOD OF THE OPEN OFFER FROM THE PUBLIC SHAREHOLDERS OF THE TARGET COMPANY BY ZF FRIEDRICHSHAFEN AG ("ACQUIRER") TOGETHER WITH WABCO ASIA PRIVATE LIMITED ("PAC 1"), LUCASVARITY ("PAC 2") AND ZF INTERNATIONAL UK LIMITED ("PAC 3") (PAC 1, PAC 2 AND PAC 3 COLLECTIVELY REFERRED TO AS THE "PACs") IN THEIR CAPACITY AS PERSONS ACTING IN CONCERT WITH THE ACQUIRER ("OPEN OFFER").

**As per SEBI (SAST) Regulations, the open offer under Regulations 3 and 4 shall be for at least 26% of the total share capital of a target company, as of the 10th working day from the closure of the tendering period of the open offer. However, the public shareholding of the Target Company is 25% as on date, and therefore, the Offer Shares represent 25.00% of the Voting Share Capital of the Target Company.*

This advertisement (**"Advertisement"**) is being issued by J.P. Morgan India Private Limited (hereinafter referred to as **"Manager to the Offer"**), for and on behalf of the Acquirer and the PACs, pursuant to and in compliance with the Securities and Exchange Board of India circular bearing reference number SEBI/CIR/CFD/DCR1/CIR/P/2020/83 dated 14 May 2020 read with SEBI/HO/CFD/DCR2/CIR/P/2020/139 dated 27 July 2020 (collectively referred to as **"Relaxation Circulars"**) to supplement:

(a) the public announcement in connection with the Open Offer, made by the Manager to the Offer on behalf of the Acquirer and PACs, to NSE and BSE on 2 April 2019 **("Public Announcement");**

(b) the detailed public statement in connection with the Open Offer, published on 3 June 2020 in the following newspapers: Financial Express (English - all editions), Jansatta (Hindi - all editions), Makkal Kural (Tamil – Chennai edition) and Mumbai Tarun Bharat (Marathi - Mumbai edition) **("DPS");** and

(c) a corrigendum to the DPS in connection with the Open Offer, published on 6 August 2020 in the following newspapers: Financial Express (English - all editions), Jansatta (Hindi - all editions), Makkal Kural (Tamil – Chennai edition) and Mumbai Tarun Bharat (Marathi - Mumbai edition) **("DPS Corrigendum")**

(d) the letter of offer dated 6 August 2020, in connection with the Open Offer **("Letter of Offer").**

Capitalised terms used in this Advertisement and not defined herein, shall have the same meaning as ascribed to such terms in the Letter of Offer.

1. COMPLETION OF DISPATCH

In terms of the Relaxation Circulars and in light of the COVID-19 situation, the Letter of Offer has been electronically dispatched to all the Public Shareholders holding Equity Shares as on Identified Date and who have registered their email ids with the Depositories and/or the Target Company. There would be no physical dispatch of the Letter of Offer to the Public Shareholders, in accordance with the Relaxation Circulars.

2. AVAILABILITY OF LETTER OF OFFER

(a) The Letter of Offer along with the Form of Acceptance-cum-Acknowledgement will be available on the respective websites of SEBI (www.sebi.gov.in), the Acquirer (www.zf.com), the Target Company (www.wabcoindia.com), the Registrar to the Offer (www.linkintime.co.in), the Manager to the Offer (www.jpmipl.com), BSE (www.bseindia.com) and NSE (www.nseindia.com).

(b) The Public Shareholders can also contact the following persons for receiving a soft copy of the Letter of Offer and the Form of Acceptance-cum-Acknowledgement:

J.P. Morgan India Private Limited
Address: J.P. Morgan Tower, Off C.S.T. Road, Kalina, Santacruz (East), Mumbai – 400 098.
Tel: +91 22 6157 3000; **Fax:** +91 22 6157 3911
Contact Person: Nilay Bang; **Email:** wabco_openoffer@jpmorgan.com
Website: www.jpmipl.com

Link Intime India Private Limited
Address: C 101, 1st Floor, 247 Park, Lal Bahadur Shastri Marg, Vikhroli (West), Mumbai - 400083, Maharashtra, India
Tel: + 91 22 4918 6170/6174/6200; **Fax:** +91 22 4918 6195
Contact Person: Sumeet Deshpande; **Email:** wabcoindia.offer@linkintime.co.in
Website: www.linkintime.co.in

3. BRIEF SCHEDULE OF ACTIVITIES

The schedule of major activities is set forth below:

No.	Activity	Date	Day
1	Date of commencement of the tendering period (Open Offer opening date)	13 August 2020	Thursday
2	Date of closure of the tendering period (Open Offer closing date)	26 August 2020	Wednesday
3	Last day of payment to the Public Shareholders whose Equity Shares have been accepted in the Open Offer	9 September 2020	Wednesday
4	Last date for publication of post Open Offer public announcement in the newspapers in which the Detailed Public Statement has been published	16 September 2020	Wednesday

***Note:** Where last dates are mentioned for certain activities, such activities may happen on or before the respective last date.*

4. OTHER INFORMATION

(a) The information contained in this Advertisement is in accordance with the Relaxation Circulars.

(b) Details relating to the procedure for tendering the Equity Shares are more particularly set out in the Letter of Offer.

(c) The Advertisement will also be available on the respective websites of SEBI (www.sebi.gov.in), the Target Company (www.wabcoindia.com), the Manager to the Offer (www.jpmipl.com) and the Registrar to the Offer (www.linkintime.co.in), in addition to the websites of BSE (www.bseindia.com) and NSE (www.nseindia.com).

ISSUED BY THE MANAGER TO THE OFFER ON BEHALF OF THE ACQUIRER AND PACS

J.P.Morgan

J.P. MORGAN INDIA PRIVATE LIMITED
J.P. Morgan Tower, Off C.S.T. Road, Kalina, Santacruz (East), Mumbai – 400 098.
Telephone number: +91 22 6157 3000; **Fax number:** +91 22 6157 3911
E-mail: wabco_openoffer@jpmorgan.com ; **Website:** www.jpmipl.com
Contact Person: Nilay Bang; **SEBI Registration Number:** INM000002970

REGISTRAR TO THE OPEN OFFER

LINK Intime

LINK INTIME INDIA PRIVATE LIMITED
C 101, 1st Floor, 247 Park, Lal Bahadur Shastri Marg, Vikhroli (West), Mumbai-400083, Maharashtra, India.
Telephone number: +91-22-4918 6200 ; **Fax number:** +91-22-4918 6195
E-mail: wabcoindia.offer@linkintime.co.in
Investor Grievance E-mail:
wabcoindia.offer@linkintime.co.in mailto:einward.ris@karvy.com
Website: www.linkintime.co.in http://www.karvycomputershare.com/
Contact Person: Sumeet Deshpande ; **SEBI Registration Number:** INR000004058

THIS ADVERTISEMENT IS ISSUED BY THE MANAGER TO THE OFFER ON BEHALF OF THE ACQUIRER AND THE PACs:

Signed for and on behalf of ZF Friedrichshafen AG
Sd/- **Dr. Jan Eckert** **Authorized Signatory**
Sd/- **Dieter Eckhardt** **Authorized Signatory**

Signed for and on behalf of WABCO Asia Private Limited
Sd/- **Ms. Sujie Yu** **Authorized Signatory**

Signed for and on behalf of LucasVarity
Sd/- **Daniel Edward Shattock** **Authorized Signatory**
Sd/- **Stephen Mark Batterbee** **Authorized Signatory**

Signed for and on behalf of ZF International UK Limited
Sd/- **Daniel Edward Shattock** **Authorized Signatory**
Sd/- **Stephen Mark Batterbee** **Authorized Signatory**

Place : Mumbai
Date : 6 August 2020

CONCEPT

SHRIRAM Transport Finance Company Limited
A WINNING RELATIONSHIP

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
CIN: L65191TN1979PLC007874
பதிவு அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், எண்.4,லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி எண்: +91 44 2499 0356
பேக்ஸ்: +91 44 2499 3272. வெப்சைட்: www.stfc.in இமெயில் ஐடி: secretarial@stfc.in

பொது அறிவிப்பு

2015ம் வருடத்திய செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 29 மற்றும் விதி 47 ஆகியவற்றின்படி இதர அலுவல்களுக்கு இடையே, ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த முதல் காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தனியான மற்றும் ஒருங்கிணைந்த) பரிசீலித்து பதிவு செய்ய கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் வியாழக்கிழமை, ஆகஸ்ட் 13, 2020 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் www.stfc.in மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகியவற்றில் இந்த அறிவிப்பு உள்ளது.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
உமேஷ் ரேவாங்கர்
நிர்வாக இயக்குனர் மற்றும் சிஇஓ

தேதி : ஆகஸ்ட் 07, 2020
இடம் : மும்பை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். IFB.No.001 /F. Assembling of Kit/ CWA /TWAD /2020/ Dated : 04.08.2020
வேலையின் விவரம்	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆய்வகத்தில் முழு அளவிலான களப்பரிசோதனைப்பெட்டி மற்றும் H_2S குப்பிகள் (களப்பரிசோதனைப்பெட்டி ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்கான பணி, வேதிப்பொருட்கள் மற்றும் ஆய்வக இதரப்பொருட்கள் வழங்குதல் உட்பட)
ஒப்பந்தப்புள்ளியின் உத்தேச மதிப்பீடு / முன் வைப்புத்தொகை	ரூ. 37.78 இலட்சம் / ரூ. 20,000.00
ஒப்பந்தக்காரர் தகுதி	இதே போன்ற துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள்
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	துணைத்தலைமைப்பொறியாளர் (ஒ.நி) த.கு.வ.வாரியம், தலைமை அலுவலகம், சென்னை–5
ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும் இடம் மற்றும் கிடைக்கும் நாட்கள்	07.08.2020 முதல் 20.08.2020 வரை துணைத்தலைமைப்பொறியாளர் (ஒ நி) த.கு.வ.வாரியம், தலைமை அலுவலகம், சென்னை–5. ஒப்பந்தப்படிவத்தின் விலை ரூ.1180